2019 ஜூலை 5]

பொருட்கள் தயாரிக்கும் 57 நிறுவனங்களுக்கு 348 இலட்சத்து 21 ஆயிரம் ரூபாய் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியபடி புதிய தொழிற்பேட்டை அமைக்க 15 முதல் 30 ஏக்கர் வரையான அரசு புறம்போக்கு நிலம் கிடைக்கும்பட்சத்திலும் போதுமான நிதி ஆதாரங்களுடனும், தொழில் திட்டங்களுடனும் தொழில் தொடங்க ஆர்வமுள்ள 20 தொழில் முனைவோர்கள் முன்வரும் நிலையிலும், அதேபோன்று தொழில் முனைவோர் சங்கம் குறைந்தபட்சம் 50 ஏக்கர் நிலத்துடன், தனியார் நிறுவனங்களுடன் தொழிற்பேட்டை அமைக்க முன்வரும் நிலையிலும், தொழிற்பேட்டை அமைப்பது குறித்து மாவட்ட நிருவாகத்துடன் கலந்தாலோசித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 50, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சந்திரசேகரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

50—

பேருந்து வசதி

***48733—திரு. சி. சந்திரசேகரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை ஊராட்சி ஒன்றியம், கீழ்பாப்பனம் மற்றும் மேல்பாப்பனம் மலைக் கிராமங்களுக்கு புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கீழ்பாப்பனம் மற்றும் மேல்பாப்பனம் ஆகிய பகுதிகளில் தட ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. நாமக்கல்

பேருந்து நிலையத்திலிருந்து மலைக் கிராமங்களான கீழ்பாப்பனம், மேல்பாப்பனம் செல்ல மேக்னிக்காடு வரை தற்போது பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. மேக்னிக்காட்டிலிருந்து கீழ்பாப்பனம் 1 கி.மீ. தொலைவிலும், மேல்பாப்பனம் 2.5 கி.மீ. தொலைவிலும் உள்ளன. இந்த ஊர்களில் மொத்தம் 25 வீடுகள் மட்டுமே உள்ளன. பொதுமக்களுடைய அடர்வும் மிகவும் குறைவாகவே உள்ளது. மேலும், இந்த ஊர்களுக்குச் செல்லும் சாலை ஒருவழிச் சாலையாக, கனரக வாகனங்கள் இயக்குவதற்கு உகந்ததாக இல்லாமலும், எதிரே வாகனங்கள் வந்தால் ஒதுங்க முடியாத நிலையில் இருப்பதாலும், தற்போதைய சூழ்நிலையில், கீழ்பாப்பனம் மற்றும் மேல்பாப்பனம் ஊர்களுக்கு பேருந்து இயக்க இயலாத சூழ்நிலை உள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சந்திரசேகரன் அவர்கள்.

திரு. சி. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொல்லிமலை பகுதியில் இருக்கின்ற பல்வேறு கிராமங்களில் மாண்புமிகு அம்மா அவர்கள் அரசின் சார்பில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அண்ணன் அவர்கள் ஏற்கெனவே 10 கிராமங்களுக்கு புதிய வழித்தடங்களை நீட்டித்து, அந்த பேருந்துகள் தற்போது நல்ல முறையில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. நான் தற்போது கேட்ட வினாவில் குறிப்பிட்டுள்ள மேல்பாப்பனம் மற்றும் கீழ்பாப்பனம் கிராமங்களில் சாலைகள் குறுகலாக உள்ளன என்பது உண்மைதான். தற்போது அதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, சாலை விரிவாக்கப் பணிகள் நடைபெறவுள்ளன. அந்தச் சாலைகளை விரிவாக்கம் செய்த பிறகு பேருந்து இயக்கக் கேட்டுக்கொள்கிறேன். கீழ்பாப்பனம் மற்றும் மேல்பாப்பனம் கிராமங்கள் ஐந்துநாடு என்று சொல்லக்கூடிய மலையின் ஒரு பகுதியில் அமைந்துள்ளன. ஏற்கெனவே இதய தெய்வம் அம்மா அவர்களுடைய ஆட்சியில் முள்ளுக்குறிச்சி பகுதியிலிருந்து நரியமேடு பகுதி வரை ரூ.16 கோடி திட்ட ஒதுக்கீட்டில் மாற்று வழிச் சாலை அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. தற்போதைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த காலத்தில், இரண்டு பேருந்துகளை அரப்பளீஸ்வரர் கோயில் வரை இயக்கினார்கள். கிட்டத்தட்ட 40 மலைக் கிராம மக்கள். . .

2019 ஜூலை 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் சந்திரசேகரன், நீங்கள்தான் மூலக் கேள்வி கேட்டிருக்கிறீர்கள். தற்போது முதல் கேள்வியைக் கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள். இன்னும் ஒரு கேள்வி இருக்கிறது. சீக்கிரம் கேள்வியைக் கேட்டு முடியுங்கள்.

திரு. சி. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அந்தப் பகுதி மக்கள் பயனடைந்து வருகிறார்கள். முள்ளுக்குறிச்சி பகுதியிலிருந்து கரூர் வழியாக மேல்பாப்பனம் வரை சாலைப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அந்த சாலைப் பணிகள் முடிவுற்றவுடன் இந்த வழித்தடத்தில் பேருந்துகளை இயக்கி, அந்த மலைக் கிராம மக்கள் பயனடைவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மேலும், மலைக் கிராம மக்கள் சார்பாக ஒரு கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். கொல்லிமலை பகுதியிலுள்ள மக்கள் பழனி மலைப் பகுதிக்குச் செல்வதற்கு பேருந்து வசதி இல்லை. எனவே, காரவல்லி பகுதியிலிருந்து காளப்பநாயக்கன்பட்டி, சேந்தமங்கலம், நாமக்கல் வழியாக பழனி வரை செல்வதற்கான புதிய வழித் தடத்தை அமைத்து, பேருந்து வசதி செய்து கொடுக்குமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11–40

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சாலை மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருப்பதாகத் தெரிவித்திருக்கிறார். சாலைப் பணிகள் முடிவுற்றவுடன், அந்த ஊர்களுக்கு பேருந்துகளை இயக்குவது பற்றி அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். பழனிக்கு பேருந்து வசதி செய்து தரவேண்டுமென்று கேட்டிருக்கிறார். தட ஆய்வுகள் மேற்கொண்டு, ஏனென்று சொன்னால், நாமக்கல்லிலிருந்து பழனி வரை இப்போது நிறைய பேருந்துகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. தேவைப்பட்டால், அதை நீட்டிப்பு செய்வதற்கு மாண்புமிகு

அம்மா அவர்களுடைய அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சந்திரசேகரன் அவர்கள்.*

திரு. சி. சந்திரசேகரன்: *மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு தங்கள் வாயிலாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பழனி செல்வதற்கு மலைவாழ் மக்கள் தினந்தோறும் பேருந்து மாறி மாறி சென்று மிகவும் கஷ்டப்பட்டு வருகிறார்கள். அதற்கான ஆய்வுகளை மேற்கொண்டு, தேவையான பேருந்துகளை விடுவதற்கான வழிவகைகளை செய்து கொடுக்க வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஆர்.ஜி. அருண்குமார் அவர்கள்.*

திரு. பி.ஆர்.ஜி. அருண்குமார்: *மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாசியோடு நடைபெறுகின்ற இந்த அரசை தலைமையேற்று நடத்திக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் அவர்களையும், அவருக்கு உறுதுணையாக இருந்து செயல்படும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். கோயம்புத்தூர் மாவட்டத்தை சிறப்பாக வழி நடத்துகின்ற எங்கள் மாவட்டத்தினுடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.*

சென்னை மாநகரில் மட்டும் செயல்படுகின்ற மாண்புமிகு அம்மாவின் உன்னத திட்டமான small bus வசதியை கோயம்புத்தூர் மாநகராட்சிக்கும் விரிவுபடுத்த இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சென்னை மாநகரில்*

2019 ஜூலை 5]

குறுகலான வழித்தடங்கள் இருக்கக்கூடிய இடங்களில் மட்டும் பொது மக்கள் பயன்பெறுகின்ற வகையிலே, சிற்றுந்து வசதியை செய்து கொடுத்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோயம்புத்தூர் மாவட்டத்திற்கும் விரிவுபடுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, அனுமதி பெற்று மதுரை மற்றும் கோயம்புத்தூர் நகரங்களுக்கும் சிற்றுந்து வசதியை செய்து கொடுப்பதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்கள்.*

திரு. தா.மோ. அன்பரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலந்தூர் தொகுதிக்குட்பட்ட ஐயப்பன்தாங்கல் பணிமனையில் கடந்த மூன்று மாதங்களாக அந்த பணிமனையிலிருந்து இயக்கப்பட்ட பத்துக்கும் மேற்பட்ட மினி பேருந்துகளை* bus depot–*வில் வைத்திருக்கிறார்கள்; இயக்குவதே கிடையாது. காரணத்தைக் கேட்டால், முதலில் அவர்கள் டிரைவர்கள், கண்டக்டர்கள் வருவது இல்லை என்று சொன்னார்கள். இப்போது கேட்டால் நஷ்டத்தில் இயங்குகிறது; அதனால் நாங்கள் இயக்கவில்லை என்று சொல்கிறார்கள். இதனால் கிராமத்தில் இருக்கிற பொதுமக்கள் மிகவும் சிரமத்திற்குள்ளாகிறார்கள். ஆக, இந்த அரசு தயவுசெய்து நிறுத்தப்பட்ட, முடக்கி வைக்கப்பட்டிருக்கிற அந்த மினி பேருந்துகளையெல்லாம் உடனே இயக்கவேண்டுமென்று தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற வழித்தடங்களையெல்லாம் நேற்றுதான் கோரிக்கையாக கொடுத்திருக்கிறார். அந்த வழித்தடங்களிலே பயணிகளின் அடர்வு மிகக் குறைவாக இருக்கிறது. போதிய அளவிற்கு பேருந்து வசதிகள் இருக்கின்றன. பேருந்துகளை முடக்கி எல்லாம் வைக்கவில்லை. பேருந்து வசதி இல்லாத வழித்தடங்களில் தேவை ஏற்படுமாயின் பயணிகளின் அடர்வுக்கு ஏற்றாற்போல் மாண்புமிகு அம்மா*

அவர்களுடைய அரசு பேருந்துகளை இயக்குவதற்கு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நேற்றைய தினம்தான் கொடுத்திருக்கிறீர்கள். அதை அதிகாரிகளிடம் கொடுத்திருக்கிறேன். தட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, தேவைப்பட்டால் நிச்சயமாக பேருந்து விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

(அ) வேலூர் பாராளுமன்றத் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டு தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்த நிலையில், வேலூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை போதை மீட்பு மையத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யும் அறிவிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் வேலூர் நாடாளுமன்றத் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டிருக்கிறது. Election Commission–ஆல் அறிவிக்கப்பட்டிருக்கிறது. Election Commission–ஆல் தேதி அறிவிக்கப்பட்டவுடன் Code of Conduct தானாக அமலுக்கு வந்துவிடுகிறது. இங்கேகூட கைத்தறித் துறையில் ஒரு கேள்வி வருகின்றபோது அந்தத் துறையினுடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது, தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டுவிட்ட காரணத்தால் Code of Conduct அமலுக்கு வந்துவிட்டது. அதனால் இப்போது அது முடியாது என்று விளக்கம் சொல்லியிருக்கிறார். ஏற்கெனவே Election Commission–ல் தெளிவாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. "The Model Code of Conduct shall come into force with immediate effect in the district in which the whole or any part of Parliamentary Constituency going for election is included" என்று தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் நேற்றைய தினம்